<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

<u>அ.வ.எண். 14/2017</u>

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **12.11.2025** |
| **பெயர்** | **சண்முகசுந்தரம்** |
| **த/பெ** | **கிருஷ்ணப்ப ஆச்சாரி** |
| **சாட்சி** | **DW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்–** 03.00 p.m.

**<u>குறுக்கு விசாரணை–</u>**

1. இவ்வழக்கில் வாதி என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்றால் என்னுடைய இடத்தில் வாதிக்கு பாகம் உள்ளதாக கோரி தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 202/1பி அதன் நான்கெல்லைகள் கிழக்கு பக்கம் இடுகாடு, தெற்கு பக்கம் தச்சூர் கூட்ரோடு சாலை, வடக்கு பக்கம் மூகாம்பிகை நகர், மேற்கு பக்கம் வாதியின் இடம். நான் குறிப்பிட்ட நான்கெல்லைகள் தவறு என்றால் சரியாக தெரியவில்லை. சர்வே எண்.202/1பி யாரிடம் இருந்து நான் வாங்கினேன் என்றால் பிரதிவாதிகளின் தயாரான நாகபூஷணம் என்பவரிடம் இருந்து வாங்கினேன். பிரதிவாதிகளும் அவரின் தாயாரும் சேர்ந்து 2006 ல் பவர் ஒன்று கொடுத்தார்கள் என்றால் சரிதான், பரிமளா என்பவருக்கு பவர் கொடுத்தார்கள்.பவர் ஏஜெண்டான பரிமளா என்பவரிடம் இருந்து 2014 ல் நான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான்.

2. சர்வே எண்.202/1பி என்ற எண்ணிற்கு சர்வே எண்ணில் கிரையம் பெற்றேனா அல்லது பைமாஷ் எண் மூலம் கிரையம் பெற்றேனா என்றால் சர்வே எண் மூலமாகத்தான் கிரையம் பெற்றேன். நாகபூஷணம் வழக்கு சொத்தை யாரிடம் இருந்து கிரையம் பெற்றார் என்றால் அங்கமுத்து முதலியார், நாகபூஷணம் அவர்களுக்கு தாண பத்திரம் மூலம் கொடுத்தார். வா.சா.ஆ.13 தானபத்திரம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டு பைமாஷ்

எண்.717, 720 மற்றும் 721 ல் மொத்த விஸ்தீரணம் 1. ஏக்கர் 33 செண்ட் எண்ணில் தான் அங்கமுத்து தானம் கொடுத்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.10 பட்டா எண்.324 ல் 2 ஏக்கர் 94 செண்ட் அங்கமுத்து பெயரில் உள்ளது என்றால் சரிதான். அந்த பட்டாவின் படி மொத்தம் 6 பைமாஷ் எண் தான் உள்ளது என்றால் சரிதான். நாகபூஷணம் அவர்களுக்கு எழுதிக்கொடுத்த பைமாஷ் எண் வா.சா.ஆ.10 ல் இடம்பெறவில்லை என்றால் 2006 ல் தான் நான் கிரையம் பெற்றேன். எனவே பைமாஷ் எண் குறித்து விவரம் எனக்கு தெரியாது. சாட்சி தற்பொழுது பைமாஷ் எண் இடம்பெறவில்லை என்றால் சரிதான் எனக்கூறுகிறார்.

3. மேற்கூறிய 6 பைமாஷ் எண் வரைபடம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டு அவர் உறுதி செய்தபிறகு அந்த ஆவணமானது வாதி தரப்பில் **வா.சா.ஆ.16 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. வாதியின் தந்தை பெயரில் உள்ள பட்டாவானது வா.சா.ஆ.2 குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் பிரிவுபடுவதற்கு முன்பு அதன் வரைபடம் மேலே குறியீடு செய்த வா.சா.ஆ.16 எனவும் தற்பொழுது பிரிவினை 202/1எ, 202/1பி ஆன பிறகு அதன் வரைபடமானது சாட்சியிடம் காண்பிக்கப்பட்டு அவர் ஒப்புக்கொண்ட பிறகு **வா.சா.ஆ.17 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. மேலே குறிப்பிட்ட சர்வே எண் உட்பிரிவு ஆனபிறகு வாதிக்கு 1 ஏக்கர் 67 செண்ட் பிரதிவாதிகளுக்கு 83 செண்ட் எனவும் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல பிரதிவாதிகளுக்கு 1 ஏக்கர் 39 செண்ட் உட்பிரிவு செய்தபிறகு ஒதுக்கப்பட்டது.

4. வழக்கு சொத்தை பொறுத்து 2018 ல் 8ம் பிரதிவாதியான சுரேந்திரன் என்பவருக்கு பவர் கொடுத்தேன் என்றால் சரிதான் சாட்சி பிறகு மாற்றி சீனிவாசன் என்பவருக்கு கொடுத்ததாக கூறுகிறார். 2006 ல் பரிமளா பவர் கொடுத்து 2015 ல் கிரையம் பெற்றிருந்த கால இடைவெளிக்கான காரணம் என்றவென்றால் கிரைய பத்திரத்தை பதிவு செய்வதற்கான தொகை இல்லாத காரணத்தினால் அந்த காலதாமதமானது ஏற்பட்டது. நான் பொய்யுரைக்கிறேன் என்றும் வேறொரு வழக்கில் 2006 ல் இருந்து 2014 வரை நிலுவையில் இருந்த காரணத்தினால் தான் அந்த காலதாமதம் என்றால் சரியல்ல. அந்த வழக்கனாது முருகேசன் என்பவர் நாகபூஷணம் பரிமளா மற்றும் என்மீதும் தாக்கல் செய்திருந்த காரணத்தினால் தான் அந்த காலதாமதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் பணம் கொடுத்து கிரையம் செய்வதாக தாக்கல் செய்யப்பட்டது.

5. அந்த வழக்கானது அசல் வழக்கு எண்.74/2007 என மாண்மிகு சார்பு நீதிமன்றம், பொன்னேரியில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் அதற்கு முன்னதாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அது எங்களுக்கு சாதகமாக தீர்ப்பானது. வாதியின் தந்தை செய்த காலதாமதத்தால் அந்த வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கு எதற்காக தள்ளுபடி ஆனது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றும், இந்த வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தெரியாது. அந்த வழக்கை எதிர்த்து முருகேசன் என்பவர் மேல்முறையீடு வழக்கு எண்.70/2010 என திருவள்ளூர் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அதனை எதிர்த்து முருகேசன் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார் என்றால் தெரியாது. உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல் முறையீடு எண்.586/2015 நீதிமன்றத்திற்கு வெளியே இரு தரப்பினரும் பேசிக்கொண்டிருக்கையில் சமரசமாக போய்விட்டது என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருந்த காரணத்தினால் தான் நான் கிரையம் பெறவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் பணம் இல்லாத காரணத்தினால் தான் வாங்க முடியவில்லை.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம். 3.50 p.m**